**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 1383/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | செண்பகராஜ், வயது 51 |
| Father Name/Husband Name | : | ஆண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of July 2026.

**(A1, A2 absent. 355 BNSS petittion filed and allowed).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரிகளை எனக்கு தெரியும். அவர் அவர்கள் எனது நண்பர்கள். சம்பவ காலத்தில் யார் என்னை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் வாக்குமூலத்தில் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக எனது நண்பரான சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்துள்ளார். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. **(அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழுங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 27.04.2025 ஆம் தேதி 21.30 மணியளவில் கோவில்பட்டி புதுரோடு இறக்கத்தில் உள்ள ஒயின்ஷாப் பாரின் அருகே நானும், எனது நண்பர் சுரேஷ்ம் நடந்து செல்லும்போது அங்கு வந்த எதிரிகள்

எங்களை வழிமறித்து கையால் என்னை முதுகிலும், நெஞ்சிலும் மாறி மாறி அடித்து கீழே தள்ளி எனது வலது கை பெருவிரலில் காயத்தி ஏற்படுத்தியதாகவும், இந்த சம்பவம் குறித்து நீங்கள் காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளிடம் சமாதானம் ஆகிவிட்டதாலும் அவருகளுக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.